## வீதி அபிவிருத்தி அதிகார சபை – 2017

-------------------------------------------------------------

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதிநிலைமைக் கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------------------------

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 திரட்டிய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிர்வாக ரீதியான மற்றும் நிதிசார் நடவடிக்கைகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்தைக் கொண்டுள்ள கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரண (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட எமியுல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட அதிவேக போக்குவரத்து (தனியார்) கம்பனியுடன் திரட்டிய நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கப்படடிருக்கவில்லை.

### 2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்திப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமை கம்பனியின் இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 05 செயற்திட்டங்களுக்குரிய சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் கூட்டுத்தொகையான ரூபா 23.86 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமை கம்பனியின் பெயரிலான நடைமுறை கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனியொன்றாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மகநெகும வீதி நிர்மாண மற்றும் இயந்திரங்கள் கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நடைக் கணக்குகளுக்குகிடையே ரூபா 1,380 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இணக்கக் கூற்றில் மூலம் முன்னர் அவ்வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வேறுபாடு தொடர்பாக பகுப்பாய்வொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கம்பனியுடன் பொதுவாக இணங்கப்பட்டு அதன் பிரகாரம் வகைப்படுத்தப்படாமல் இருந்ததுடன் ஒப்பந்தங்களுக்குரிய இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியால் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களை சான்றுறுதிப்படுத்தும் போது கருத்திற் கொள்ளக்கூடிய கால தாமதமொன்று காணப்பட்ட காரணத்தினால் மீதிகளுக்கு இடையே கருத்திற் கொள்ளக்கூஎய வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,098.97 மில்லியன் கிரயமான இயந்திரகூடம் மற்றும் இயந்திர மீதிகளில் 98.9 சதவீதம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்திருந்தது. இதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 அல்லது 07 இன் பிரகாரம் அச்சொத்துக்கள் மீள்மதிப்பீடு அல்லது மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு ஆக்கபூர்வமான பயன்படு காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 சனவரி 01 ஆந் திகதி வரை முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள போதிலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,591.66 மில்லியனான 410 வாகனங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டோ அல்லது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பீட்டு வேறுபாடொன்றாக கருதியோ கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபை வாகனங்கள் திருத்த வேலைகளுக்காக ரூபா 93.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இச்செலவினத்தில் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4.71 மில்லியன் செலவினமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வெளித்தரப்பினரால் பயன்படுத்திய சொத்துக்கள் பராமரிப்பு தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மகநெகும மக மதுர கட்டிடத்தின் பராமரிப்பு வேலைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 81.57 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.5 மில்லியன் 2018 ஆம் ஆண்டிற்குரிய முற்பணக் கொடுப்பனவாகும். எவ்வாறாயினும், அதிகாரசபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முழுத் தொகையும் 2017 ஆம் ஆண்டில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த அனைத்து செலவினங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரிசை அமைச்சிற்காக பொதுவாக செலவிடப்பட்டிருந்தமையால் பயன்படுத்தப்படும் கட்டிடங்களின் பரப்பளவின் பிரகாரம் இச்செலவினம் அதிகாரசபை மற்றும் அமைச்சிற்கு இடையே பகிரப்பட்டால் அதிகார சபையின் செலவினம் ரூபா 58.14 மில்லியன் மற்றும் ரூபா 23.42 மில்லியன் அமைச்சின் செலவினமாகும். இது தொடர்பாக பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2018 ஆம் ஆண்டிற்குரிய அதிகாரசபையின் செலவினம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினமாக இனங்காணப்படாத ரூபா 26.4 மில்லியன் 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்படும் மாகாண பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அலகுகளில் அட்டுறு செலவினம் கருத்திற் கொள்ளப்பட்டால் இதன் நிலைமை இதனை விட உயர்ந்த பெறுமதியொன்று எடுக்கலாம்.

(ஊ) 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,664.54 மில்லியன் கிரயமான 252,055 சதுர அடியான தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 3,580 சதுரஅடி அளவிலான விரிவுரை மண்டபம் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலையில் காணப்பட்டவில்லை. ஆதலால் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் இந்த விரிவுரை மண்டபத்தின் கிரயம் ரூபா 245 மில்லியன் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 12 மில்லியனாக கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் மொத்த நில அளவான 252,055 சதுரஅடியில் 72,400 சதுர அடி அல்லது மொத்த சதுர அடியில் 29 சதவீதம் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வந்தன. பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அந்த அளவின் கிரயமான ரூபா 496.5 மில்லியன் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 24.83 மில்லியன் என்பவற்றிற்காக எவ்வித சீராக்கமொன்றும் கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கட்டிட கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்ட தொகையான தெலகபான பொலிசுக்காக ரூபா 80.8 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கு வருடாந்தம் ரூபா 4.04 மில்லியன் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், கட்டிடத்தின் நேரடி நலன்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளாமையால் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் இக்கட்டிடத்தை அதிகாரசபையின் சொத்துக்களிலிருந்து சட்டரீதியாக அகற்றுவதற்கும் அதற்குரிய பெறுமானத்தேய்வு பெறுமதியை நிதிக்கூற்றுக்களிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை முடிவுறுத்துவது அல்லது இல்லாமை தொடர்பான நிச்சயமான தன்மை இல்லாத 13 ஒப்பந்தக்காரர்களுக்குரிய ரூபா 154 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முற்பணம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் ஆலோசனைகளுக்கு முரணாக நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐயக் கடன் ஒதுக்க கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையால் பராமரிக்கப்படும் A, B மற்றும் AB தர வீதிகள் 12,180 கிலோ மீற்றர் காணப்பட்ட போதிலும் அவற்றின் தூரம், அளவு அல்லது பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிரூபணமாவதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுப்பனவு பிரிவு, கிராமிய பாலம் பிரிவு மற்றும் மாகாண அலுவலகங்களுக்குரிய 03 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரை 04 ஆண்டுகள் முதல் 05 வரை மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக முறையே ரூபா 174.47 மில்லியன், ரூபா 95.87 மில்லியன் மற்றும் ரூபா 21.36 மில்லியன் தாமதக் கட்டணம் தொடர்பாக முறையான மீளாய்வொன்று செய்து பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதி நிலைமைக் கூற்றில் உள்நாட்டு வங்கிக் கடன் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கு உரித்தான பிற்போடப்பட்ட செலவினமாக ரூபா 112 பில்லியன் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த தேசிய வங்கி நிதியத்திலிருந்து மேற்கொண்ட வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு செலவினம் இவ்வாறு பிற்போட்ட செலவினமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்த போதிலும், அரசின் பொதுவான பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் அதிகாரசபையினால் செலவிடப்பட்ட வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு செலவினம் பொதுவான செலவினமொன்றாக வருமானக் கூற்றில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரே செயற்பாடு தொடர்பாக பணம் கிடைக்கும் மூலாதாரத்தின் பேரில் உரிய செலவினத்தை கணக்கீடு செய்வதற்காக 2 கணக்கீட்டு கொள்கைகள் பின்பற்றியிருந்தமை சர்ச்சைக்குரிய கணக்கீட்டு கொள்கை தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இற்கு முரணாக அமைச்சு மற்றும் வெவ்வேறு செயற்திட்டங்களில் பயன்படுத்தும் ரூபா 955.86 மில்லியன் கிரயமான 201 வாகனங்கள் மற்றும் அவ்வாகனங்களுக்காக ரூபா 177.90 மில்லியனான பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு அதிகாரசபையின் வருமானத்திறகு பதிவழிக்கப்பட்டமையால் நிதி விளைவுகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தெருக்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்காக உள்நாட்டு வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள கடன் தவணைப் மற்றும் உரிய வட்டியுடன் மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்ட பணம் தொடர்பாக அதிகாரசபை 2016 ஆம் ஆண்டு வரை காசு அடிப்படையில் கணக்கு வைக்கும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. 2017 நிதி ஆண்டிலிருந்து அமுலாகும் வரை அட்டுறு அடிப்படையாக மாற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் இறுதி 06 மாதங்களுக்காக உரிய கடன் தவணை மற்றும் கட்டிடங்கள் கொடுப்பனவிற்காக 2016 ஆம் ஆண்டில் சனவரி அதிகாரசபைக்கு பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 7,795 மில்லியனான தொகை 2017 நிதிக்கூற்றுக்களுடன் மீண்டும் வெளியிட்ட போது உள்நாட்டு வங்கிக் கடன் மற்றும் வட்டிக்காக காசு திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானமாக காண்பிக்கப்படும் மீதிகளிலிருந்து உரித்துக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2016 ஆம் ஆண்டிற்காக பின்னோக்கி மீண்டும் பிரசுரிக்கப்பட்டிருந்த வரிக்கு முன் இலாபம் ரூபா 7.95 மில்லியன் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திறைசேரி உண்டியல்களில் அட்டுறு வட்டி ரூபா 76.30 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு தயாரான சுய காப்புறுதி நிதியத்திற்குரிய கிடைக்க வேண்டிய வட்டியான ரூபா 1.10 மில்லியன் கழிக்கப்பட்டு உள்ளவாறான வட்டி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மொத்த கடன் பட்டோர் மீதியிலிருந்து 26 சதவீதம் ஓராண்டை மிகைத்திருந்தாலும் அதன் பரம்பலின் பிரகாரம் எதிர்கால ஐயக்கடன் அளவு ஆபத்து பகுப்பாய்வு செய்யப்படாமல் ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 168,831 ஆன ஒதுக்கீடு போதியளவில் காணப்படவில்லை.

(ஈ) தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிர்மாண காலப்பகுதியில் டொலர் பெறுமதி அதிகரித்தமையால் வெளிநாட்டு பணத்தை உள்நாட்டு பணமாக மாற்றும் போது கிடைத்த நலனை பயன்பாட்டிற்கு எடுத்து 2006 ஏப்ரல் 11 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு வீதி புனரமைப்பு மற்றும் அண்மைய செலவினத்தின் பேரில் செலவிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 5.32 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், இச்செலவினம் அதிவேக நெடுஞ்சாலை வீதியின் கிரயத்திற்கு சேர்க்கப்பட்டு மூலதனமாக்கிய காரணத்தினால் அதிவேக நெடுஞ்சாலையின் கிரயம் அப்பெறுமானத்தினால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அதன் மீதி அளவும் ரூபா 159.73 மில்லியன் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையின் 2016 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தேசிய பெருந்தெருக்களுடன் அண்மித்த செயற்திட்டத்தின் மூலம் ரூபா 108.95 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களிலிருந்து ரூபா 25.8 மில்லியன் தளபாடங்கள் அமைச்சிற்குரிய தளபாடங்களாக இருப்பதால் அந்த தளபாடங்களுக்குரிய பெறுமானத்தேய்வு மற்றும் கிரயம் என்பன மீண்டும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட வாகன சொத்துக்கள் பதிவேட்டிலும் அற்குரிய கணக்குகளில் இரண்டு தடவை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களின் கிரயம் ரூபா 25.27 மில்லியன் மற்றும் தேறிய பெறுமதி ரூபா 11.46 மில்லியனாக இருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு வங்கி நிதிய செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட ரூபா 112.69 மில்லியனான 13 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த ரூபா 33 மில்லியனான 7 வாகனங்கள் அதற்குரிய 4.89 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உள்நாட்டு வங்கி நிதிய செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வாகனங்களுக்குரிய 2017 சனவரி 01 இல் உள்ளவாறு அவற்றின் ஆரம்ப கிரயம் ரூபா 176.62 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த இம்மீதிகளுக்குரிய கணக்கு பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த அட்டவணையின் பிரகாரம் கிரயம் 170.02 மில்லியனாக இருந்தமையால் அந்த ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா 6.60 மில்லியனான வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டிற்காக உள்நாட்டு வரி செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வாகனங்கள் பெறுமானத்தேய்வு பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 121.14 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 57.64 மில்லியனாக இருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கிடலுக்கு இடையே ரூபா 63.50 மில்லியனால் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 112.70 மில்லியனான வாகனங்கள் 2017 ஆம் ஆண்டின் போது கணக்குகளுக்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களுக்குரிய வாகன பெறுமானத்தேய்வு ரூபா 81.81 மில்லியன் முன்னைய ஆண்டின் சீராக்கமாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உரித்து மாற்றங்களின் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த உரித்துக்களின் பெறுமதி ரூபா 206,485 மில்லியனாக இருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த உரிமைகளின் பெறுமதி ரூபா 204,813 மில்லியனாக இருந்தது. 2017 ஆம் ஆண்டிற்குரிய சீராக்கப்பட்ட பிற்போடப்பட்ட வரிகளுக்கு பின்னரான இலாப உரித்து மாற்றங்கள் கூற்றுக்கு சீராக்கம் செய்யப்பட்டமையால் நிதி நிலைமைக் கூற்றிலும் உரித்து மாற்றங்கள் கூற்றிலும் காண்பிக்கப்படுகின்ற (மொத்த உரித்துக்கு) மொத்த தேறிய சொத்துக்கள் இடையே ரூபா 1,672 மில்லியனான வேறுபாடு காணப்பட்டது.

(க) மத்திய மாகாணத்திலும் பொரளை பிரதேசத்திலும் அமைந்துள்ள அதிகாரசபையின் 31 கடைகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படாமையால் அதிகாரசபையின் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(க) ரூபா 2 மில்லியனான கையிலுள்ள காசு மீதிகள் மற்றும் ரூபா 137 மில்லியனான திறைசேரி உண்டியல்கள் முதலீடாக மொத்த ரூபா 139 மில்லியனாக சுய ஆயுள் காப்புறுதி நிதியமாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தளவு நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு உரித்தான சொத்தாக இருந்ததால் அவற்றை அதிகார சபையின் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டமையால் அதிகாரசபையின் சொத்துக்கள் அப்பெறுமதியால் மிகையாக கணிப்பிடப்பட்டிருந்தது.

(கா) வேலை ஆரம்பிப்பு முற்பணம் தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் முறையே ஓராண்டிற்கு குறைந்த ஓராண்டிற்கும் நான்கு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மற்றும் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட முற்பணம் ரூபா 698.77 மில்லியன் ரூபா 768 மில்லியன் மற்றும் ரூபா 171 மில்லியனாக இருந்த போதிலும் அறவீடுகள் தாமதகாலம் கருத்திற் கொள்ளப்பட்டு இதற்காக போதியளவு ஒதுக்கீடு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையொன்றோ அல்லது அறவீட்டு நடைமுறையொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) அதிகாரசபையின் காணி பிரிவின் அறிக்கையின் பிரகாரம் 02 ஏக்கர் 03 ரூட் 27.02 பேர்ச் அளவிலான ரூபா 53.6 மில்லியன் பெறுமதியான காணி தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(கீ) அதிகாரசபையின் சட்டப் பிரிவிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் 44 ஏக்கர் அளவிலான ரூபா 210 மில்லியனான பெறுமதியான 15 காணிகள் தொடர்பாக கொள்வனவு, அகற்றுதல் தொடர்பாக எவ்வித குறிப்பொன்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சட்ட உரித்தல்லாத போதிலும், தடை ஏதுமில்லாமல் உரித்து கொண்டுள்ள 1026.54 ஏக்கர் காணி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(கூ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 152 மில்லியன் கூட்டுத்தொகையான கொள்வனவு முற்பணம், ஒப்பந்தங்கள் மற்றும் அளவீட்டு முற்பணங்கள் தீர்வு செய்யப்படாது காணப்பட்டமையால் அப்பெறுமானத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நிதி விளைவுகள் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தன.

(கெ) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதியினுள் ரூபா 935.7 மில்லியனான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் கட்டிடங்களின் பெறுமதி அப்பெறுமதியால் கூடுதலாகவும் அலுவலக உபகரணங்கள் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 154.65 மில்லியனால் குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கே) வடக்கு வீதி இணைப்பிற்கான வெளிநாட்டு நிதி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 90 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 09 வீடுகள் மற்றும் 03 அலுவலக கட்டிடங்கள் 2017 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இச்சொத்துக்கள் மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(கை) அதிகாரசபையினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட பணம் நடைமுறைப் பொறுப்பு மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்துவதற்காக பயன்படுத்திய அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தெரிவு பரிசோதனையின் கண்டறியப்பட்டதன் பிரகாரம் அதிகாரசபையின்

நிர்மாணங்களுக்குரிய மேல் மாகாணத்தின் வீதிகளை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்தல் ஒப்பந்தங்கள் ஊடாக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 270.63 மில்லியன் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக சமமாக பகிர்ந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கொ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த முதலீட்டு அட்டவணையின் பிரகாரம் கட்டிடங்கள் நிதியத்திலிருந்து ரூபா 32 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கட்டிட நிதியமொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கோ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள், நிறுத்தி வைத்தல் தொகை மற்றும் வீதிகளை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்தல் நிறுத்தி வைத்தல் தொகையின் பேரில் அதிகாரசபையின் கடப்பாடு ரூபா 3.53 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 672 மில்லியன் மீள் விலைக்கு கொள்வனவு உபகரணங்களின் பேரில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய ரூபா 2.85 மில்லியன் நிதி ஏற்பாடு பற்றாக்குறை காரணமாக முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மேற்படி கடப்பாடு மீதிகளில் ரூபா 359 மில்லியனான மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்ததுடன் இது தொடர்பாக எவ்வித கணக்கு நடைமுறையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கௌ) சேவை நாடுனர் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சேவை நாடுனர் முற்பணம் மற்றும் ஏனைய பெறுவனவுகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்களின் அளவு ரூபா 2,332 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அப்பொறுப்புக்களுக்காக செய்யப்பட்டிருந்த முதலீடுகளின் பெறுமதி ரூபா 3,608 மில்லியனும் நடைமுறைக் கணக்குகளில் வைப்புக்கள் ரூபா 13.25 மில்லியனும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறான விசேட நிதியமொன்றை பேணிச் செல்வது தொடர்பான விபரங்கள் மற்றும் காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

அதிகாரசபைக்கு எதிராக ஊழியர்களால் தொடரப்பட்டிருந்த வழக்குகளுக்குரிய ரூபா 674 மில்லியனான நிகழத்தக்க பொறுப்புக்கள் இருப்பதை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்புக்கள் தொடர்பாக விசுவாசமான மதிப்பீடு மற்றும் தொழில்துறை மதிப்பீடு காலரீதியில் மீளாய்வு செய்து உரிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கடன்பட்டோர் குறிப்பின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் சம்பள மீள் நிரப்பலாக ரூபா 108.92 மில்லியன் அறவிடுவதற்கு இருந்த போதிலும் செயற்திட்ட கணக்குகளில் அவ்வாறான பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர் இத்தொகையில் ரூபா 99.89 மில்லியன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் அதிகாரசபைக்கு மீள் நிரப்பியதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் கிரயமாக ரூபா 116,381 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 117,163 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்குரிய ரூபா 782 மில்லியனான வேறுபாடு காணப்பட்டதுடன் இவ்வேறுபாட்டிற்காக இணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வாகனங்களின் கிரயம் ரூபா 3.363 மில்லியனாக இருந்த போதிலும் அதற்குரிய பட்டோலையின் பிரகாரம் வாகனங்களின் கிரயம் ரூபா 3,450 மில்லியனாக இருந்தால் அப்பெறுமதிக்கு இடையே ரூபா 87 மில்லியனான வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் உள்நாட்டு வங்கிகடன் செயற்திட்ட வகைப்படுத்தலின் கீழ் வாகனங்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகளில் ஆரம்ப மீதி நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளுக்கு இடையே ரூபா 57.27 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேசிய பெருந்தெருக்களுடன் அண்மித்த செயற்திட்டத்தின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த மகநெகும மஹமெதுர கட்டிடத்தின் கிரயம் ரூபா 2,506 மில்லியன் என 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அச்செயற்திட்டத்தின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 2,664 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இம்மீதிகளிற்கு இடையே ரூபா 158 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) தலைமை அலுவலக கட்டிடம் தவிர நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏனைய கட்டிடங்களின் பெறுமதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதி மற்றும் சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதிக்கு இடையே ரூபா 55.04 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு வங்கி செயற்திட்டங்களுக்காக பெற்றுக்கொண்ட கடன்களில் தீர்வு செய்யப்படாத மீதி மற்றும் அத்திகதியில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் அக்கடன்களுக்குரிய சொத்துக்களுக்கு இடையே ரூபா 1,425 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.2.8 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 செப்தெம்பர் 15 ஆந் திகதியில் தேசிய பாதீட்டு பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் அந்த ஆண்டின் ஆகஸ்ட் 15 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையின் அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து கிடைத்த வருமானத்தில் 04 பில்லியன் தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு திறைசேரிக்கு கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், இப்பணத்தை மீண்டும் அதிகாரசபைக்கு அறவிடமுடியுமென திட்டவட்டமான உறுதிப்படுத்தலொன்று திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களுக்காக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.909 மில்லியனான கடன் / முற்பணத் தொகையில் 04 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 303.06 மில்லியன் 2018 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அறவிடுவதற்கு இருந்த தொகை ரூபா 1.695 மில்லியனாக காணப்பட்டது.

(இ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்போது காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா 1,048 பில்லியன் அறவிடுவதற்கு காணப்பட்ட போதிலும், அமைச்சு தற்போது செயற்படாத நிலைமையினுள் அக்கடன் மீதியை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மையொன்று நிலவியது.

(ஈ) சிவில் விமான சேவைகள் அமைச்சு, அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம், இலங்கை முதலீட்டு சபை மற்றும் அரச முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு ஆகிய நிறுவனங்களிலிருந்து ரூபா 260.73 மில்லியன் அறவிடுவதற்கு இருப்பதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறான பொறுப்பொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இம்மீதிகளை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்படுகின்றது.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது மாத்தறை ஹக்மன வீதி விரிவாக்கலின் கீழ் காணி கையேற்கும் போது இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக திககொடை பிரதேச செயலகத்திற்கு மீண்டும் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி ரூபா 29.14 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1.37 மில்லியன் பணம் 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 28.04 மில்லியன் தொகை மேலும் கிடைக்க வேண்டியிருந்தது. தற்போது செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் உரிய பணம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

### 2.2.9 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வகைகளுக்கும் எதிராக சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| | வகை | பெறுமதி<br>ரூபா.மில்லியன் | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| (அ) | இ2015 ஆம் ஆண்டின் போது தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்திலிருந்து கிடைத்த சொத்துக்கள் | 2,124 | கணக்கீடு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் |
| (ஆ) | மோட்டார் வாகனங்கள் - 658 | குறிப்பிடப்பட வில்லை | சொத்துக்கள் பதிவேடு |
| (இ) | மோட்டார் வாகனங்கள் - 224 | குறிப்பிடப்பட வில்லை | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயக திணைக்களத்தின் பதிவுசெய்தல் விபரங்கள் |
| (ஈ) | பிணை வைப்பு | 14.7 | பிணை வைப்பு பதிவேடு மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் |
| (உ) | கட்டிடங்கள் (தலைமை அலுவலக கட்டிடங்கள் தவிர) | 1,000 (கிரயம்) | கட்டிடத்தின் அமைப்பு, பெறுமதி, வகை, அளவு போன்ற விபரங்கள் |
| (ஊ) | அதிவேக நெடுஞ்சாலை மூலதனமாக்கல் | 243,385 | அதிவேக நெடுஞ்சாலை மூலதனமாக்கலுக்கு சமமான அரச மானியமாக கருதி நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆவணங்கள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன்** இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவு | நலன்புரி நடவடிக்கைகளுக்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பதவியணி போக்குவரத்து சேவை வழங்கலுக்காக அந்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 5.2(iii) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயம் | இடர்கடன் தொடர்பான உயர் எல்லையான ரூபா 250,000 ஐ விஞ்சி உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. அறவிடப்படாத ரூபா 1.5 மில்லியனான 22 கடன் மீதிகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) ii ஆம் அத்தியாயத்தின் 06 ஆம் பிரிவு | நியமனம் அல்லது பதவி உயர்விற்காக பின்பற்றப்பட வேண்டிய முன் நிபந்தகைள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நியமன அதிகாரி திருப்திய வேண்டிய போதிலும் 82 நிரந்தர உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கும் போது குறித்த முன் நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>அதிகாரசபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர் அதிகாரசபைக் கொடுக்கல் வாங்கல்களின் அங்கீகாரமளித்தல், அனுமதியளித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்தல் தொழிற்பாடுகளினை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) ii ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | ஏதேனும் பதவியொன்றில் தற்காலி வெற்றிடமாக இருத்தல் பதவியின் செயற்பாட்டு தேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிரப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பதவியில் பதில் கடமைக்காக வேறொரு உத்தியோகத்தரொருவர் நியமிக்க முடியம். அதிகாரசபையின் அக்கரைப்பற்று பிரதான பொறியியலாளர் அலுவலகத்தில் வெற்றிடமாக இருந்த நிர்வாக உதவியாளர் பதவியை |

| | | |
|---|---|---|
| | | நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரி நேர்முக பரீட்சை திகதிகூட தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக எழுதுனர் சேவையின் I ஆம் தர உததியோகத்தர் ஒருவர் பதில் கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். |
| (iii) | vi ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் 88 ஆம் விதி | ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் பிரத்தியேக கோவையொன்று முழுமையாக பேணப்படுதல் மற்றும் நாளதுவரையாக வைத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்நியதிகளுக்கு இணங்க பிரத்தியேக கோவையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு வங்கி கணக்கிற்குரிய தாக மாதாந்தம் தயாரிக்கப்படும் வங்கிக் கணக்கிணக்க கூற்று அடுத்த மாததின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் சில பிரிவுகள் மற்றும் உப அலுவலகங்கள் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டம் | (i) சட்டத்தின் பிரகாரம் சேவை முடிவுறுத்தப்படும் போது படிகளுக்காக தொழில் திணைக்களத்திடமிருந்து விளக்கமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>(ii) சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடையாக ரூபா 4.6 மிலலியன் கழிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2017 பாதீட்டு முன்மொழிவு இல.373 | அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரலடையால இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகம் உட்பட மேலும் பிரதேச அலுவலகங்களில் ஊழியர் வருகை மற்றும் வெளியேறல் பதிவுசெய்வதற்காக அவ்வியந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 2.4 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குரிய மாத்தறை நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகத்தின் கொவியாபான பிரதேசத்தின் 01 ரூட் 38.4 பேர்ச் அளவிலான காணியை குத்தகைக்கு வழங்குவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் குத்தகை வாடகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கு அதிகாரம் இல்லாதிருந்த உத்தியோகத்தரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதி 142 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 5.2(iii) பிரிவின் பிரகாரம் இடர்கடன் வழங்கும் போது ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 250,000 இற்கு மட்டுப்படுத்தப்படாத காரணத்தினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 549 உத்தியோகத்தர்களுக்காக முறையான அதிகாரமொன்று இல்லாமல் ரூபா 64 மில்லியன் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய குறுக்கு வீதி சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அதிவேக நெடுஞ்சாலையிலிருந்து சேகரிக்கப்படும் கட்டணங்கள் அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் இவ்வாறு சேகரித்த கட்டணங்கள் தேசிய பெருந்தெருக்கள் (அதிவேக நெடுஞ்சாலைகள்) அபிவிருத்தி செய்து நடாத்திச் செல்லும் செயற்பாட்டிற்காக பயன்படுத்த வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரை அதிவேக நெடுஞ்சாலை முறைமையிலிருந்து சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 27,236 மில்லியனான வருமானத்தில் ரூபா 13,093 மில்லியன் மேற்குறித்த வர்த்தமானி நிதியத்திற்கு புறம்பான செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 85 மில்லியனாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 7,872 மில்லியனாக இருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 7,787 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 252 மில்லியனால் குறைவடைந்தும் செலவினம் ரூபா 5,720 மில்லியனால் அதிகரிப்பும் இதற்காக தாக்கமளித்திருந்தது. வீதி பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிகாக தேசிய சேமிப்பு வங்கி கடனுக்காக கிடைத்த திறைசேரி நிதிஏற்பாட்டின் பெறுமதி ரூபா 3,300 மில்லியனாக இருந்ததுடன் வீதி பராமரிப்பு செலவினத் தலைப்பின் கீழான பிற்போடப்பட்ட செலவினம் ரூபா 1,840 மில்லியன் மற்றும் ரூபா அமைச்சின் முற்பணம் ரூபா 1,460 மில்லியனுக்காக செலவிடப்பட்டமை இதற்கான காரணாக இருந்தன.

## 4. செயலாற்றல்

### 4.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 மே 30 ஆந் திகதிய PED/12/2003 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவும் மேவுகை செய்யக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நிர்வாகம், திட்டமிடல் பயிற்சி, நீதி காண, ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் இயந்திர பிரிவுகள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் பிரதான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் இச்செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதிகளை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 6,842 மில்லியன் மற்றும் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,452 மில்லியன் நி.பி 66 மற்றும் 69 வகை மாற்றல் மூலம் ரூபா 2,440 மில்லியனுமாக மொத்தம் ரூபா 10,737 மில்லியன் தேறிய நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 9211 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் தேறிய ஏற்பாடுகளில் 14.20 சதவீதம் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது,

(ஈ) 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதிகாரசபையின் விடயப்பரப்பிற்கு எடுக்கப்படும் 234 வீதி ஒப்பந்தங்களும் அதிகாரசபையின் விடயப்பரப்பிற்கு எடுக்கப்படாத 234 வீதி ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது அதிகாரசபை 126.09 கிலோமீற்றர் வீதிக்காக ரூபா 2,155.2 மில்லியனான 75 ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதில் 51 வீதிகள் அல்லது 68 சதவீதம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விடயப்பரப்புக்கு எடுக்கப்படாத ஒப்பந்தங்களாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குரிய பொரல்ல சுரங்க வீதியின் கடையொன்று தனியார் வர்த்தகர் ஒருவருக்கு 2004 நவம்பர் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குத்தகைக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டிற்காக குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1.69 மில்லியனான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய மேலும் 17 கடைகளுக்கு உரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்படாத குத்தகை தொகை ரூபா 720,370 ஆக இருந்தது.

(ஆ) பொரல்ல சுரங்க வீதியில் அமைந்துள்ள ககடைகள் மற்றும் மத்திய மாகாணத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்கும்போது உரிய குத்தகை வாடகை உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட 03 ஆவது நிபந்தனையின் பிரகாரம் மாதாந்த வாடகை கொடுப்பனவு தாமதத்திற்கு அல்லது தவிர்க்கும் போது மாதாந்த வாடகையில் 05 சதவீத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய தாமத காலம் கருத்திற் கொள்ளப்பட்டு தண்டப்பண அறவிடப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் மாகாண பணிப்பாளர்களிடமிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் அதிகாரசபைக்குரிய 21 ஏக்கருக்கு அண்மித்த பரப்பளவிலான காணிகளில் அத்துமீறி குடியிருந்த போதிலும், அவர்கள் அவற்றிலிருந்து அகற்றி அதிகாரசபையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையினால் வெவ்வேறு பிரிவுகளினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 13 கட்டிடங்கள் மீண்டும் உரிய உரித்தாளிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 3.16 மில்லியனான பிணை வைப்புக்களை மீளக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2004 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் மற்றும் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த கம்பனிகளின் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனங்களில் முதலீடுகள் தவிர 2017 ஆம் ஆண்டில் இறுதிவரை எவ்வித பங்கிலாபமும் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் 86 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு 30 நாட்கள் கடந்திருந்ததுடன் அத்தாமதத்தின் பேரில் அதிகாரசபையால் மிகைக் கட்டணம் விதிக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 5.01 மில்லியனாக இருந்தது.

(எ) அதிகாரசபையினால் மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடத்தில் 8100 சதுரஅடி என குத்தகை வழங்குபவரால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய நில வரைபடத்தின் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டிடத்தை பொறுப்பேற்க முன்னர் கட்டிடத்தில் இருந்த குறைபாடுகள் குத்தகை வழங்குனரைக் கொண்டு திருத்தியமைத்திருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்மாணப் பிரிவிற்குரிய 2016 ஆம் ஆண்டில் போதும் ஆரம்பிக்கப்பட்ட 60 ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்தி செய்யும் இலக்கிடப்பட்ட திகதிகளை மிகைத்திருந்தது. அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 278.74 மில்லியனாக இருந்தது. மேலும் இந்த ஒப்பந்தங்களின் முற்பணம் பிணை பாதுகாப்பின் காலமும் அத்திகதியில் காலாவதியாகி அல்லது காலாவதியாகியிருந்தது.

(ஆ) நிர்மாணப் பிரிவின் கீழே செயற்படுத்தப்பட்ட 04 ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட வேலை ஆரம்ப முற்பணம் ரூபா 28.49 மில்லியனுக்குரிய ஒப்பந்தங்களிடமிருந்து கழித்துக் கொள்ளாமல் வேறு ஒப்பந்தங்களிலிருந்து அறவிடுவதற்கு அதிகாரசபை இணங்கியிருந்தது. பிரதேச பாலம் நிர்மாணப் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட 2 ஒப்பந்தங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அறவிடப்படாமல் காணப்படும் வேலை ஆரம்பிப்பு முற்பணம் மீதி ரூபா 1.4 மில்லியனாக இருந்தது. அதன்பிரகாரம் அதிகாரசபைக்குரிய ரூபா 29.89 மில்லியன் கூட்டுத்தொகையான ஒப்பந்தக்காரர்களுக்கு நிறுத்தி வைத்தல்களை எடுப்பதற்கு அதிகாரசபையின் முகாமைத்துவத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் பெயரிடப்பட்ட 64 வீதிகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது தேசிய சேமிப்பு வங்கி கடன் மூலம் வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தலொன்றிற்காக பெற்றுக்கொண்ட 28 பில்லியன் தொகையில் ரூபா 6.09 மில்லியன் தொகை ஏனைய 20 செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டத்தின் மூலம் அச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனமொன்று அதிகாரசபையின் தலைவரால் சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டு வங்கிக் கடன் உதவி செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் கிரயம் ஒரு வகைப்படுத்தலுக்கு கீழ் ரூபா 51.27 மில்லியனாகவும் மற்றொரு வகைப்படுத்தலின் கீழ் ரூபா 44.43 மில்லியன் என வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மேல்மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது குத்தகையாளருக்கு ரூபா 1.35 மில்லியன் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பொன்றும் ஓராண்டிற்கு குத்தகை வாடகைக்குச் சமமான ரூபா 5.4 மில்லியன் பணத்தை முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளச்செலுத்த வேண்டிய வைப்பொன்றாகவும் முற்பணம் ஆகிய இரண்டினது கொடுப்பனவு தேவைப்பாடு இனங்காணப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்துவதற்கு முடியவில்லை.

(உ) 2015, 2016 மற்றும் 2017 ஆகிய 03 ஆண்டுகளுக்காக மாத்திரம் அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 371 மில்லியன் இலங்கை பொலிஸிற்கு வெவ்வேறு சொத்துக்களை விலைக்கு வாங்குதல், வீடுகளை குத்தகை அடிப்படையில் எடுத்தல் மற்றும் எரிபொருள் வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தன.

### 4.5 வெளிப்படையான முறைகேடுகள்

(அ) அதிகாரசபைக்குரிய மாத்தறை நிறைவேற்று பொறியிலாளர் அலுவலகத்தின் வெலிகம பிரதேசத்தில் 01 ரூட் 38.4 பேர்ச் அளவிலான காணிக்காக வருடாந்த குத்தகை தொகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுதவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதிய RDA/DG/EST ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 82 உத்தியோகத்தர்கள் நிரந்தர பதவியணியினர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். பின்னர் இந்த பதவி உயர்வு இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3.1 மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) குத்தகை கோவைகள் செயற்படுத்தப்படாத 25 குத்தகையாளர்கள் மற்றும் குத்தகைக்காக பதிவு செய்யப்பட்டிருந்த இரண்டு குத்தகையாளருக்கு ரூபா 35.09 மில்லியன் தொகை அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதில் ரூபா 12.5 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த முறையற்ற குத்தகை மீள்நிரப்பல்கள் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 2.5 மில்லியனான நட்டம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கனிஷ்ட பதவியணி உத்தியோகத்தர்களிற்கான சீருடைகளை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை ஆடைகள் மற்றும் வணிகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் ரூபா 2 மில்லியனிற்கு சமமான ஆடைகள் மற்றும் துணிகள் 2018 நவம்பர் 08 வரையிலும் உத்தியோகத்தர்களிற்கிடையே பகிர்ந்தளிக்கப்படாமல் விளைவற்றிருந்தன.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் உத்தியோகத்தர்களிற்கு சீருடைகள் வழங்கப்பட்ட பின்னர் அப்பிரிவினால் மீண்டும் சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 693,050 பெறுமதியான வெள்ளை மேற்சட்டை துணியும் சப்பாத்துக்களும் அதிகாரசபையின் உடுமுல்லவில் அமைந்துள்ள களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.7 ஏனைய அரச நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்படுகின்ற ரூபா 955.88 மில்லியன் கிரயமான 201 வாகனங்கள் அமைச்சு மற்றும் வெவ்வேறு செயற்திட்டங்களில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையால் அதிகாரசபைக்குச் சொந்தமான மேலும் 37 வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.71 மில்லியன் தொகை அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

ஆட்சேர்ப்பு நடைமுறை நாளதுவரையாக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் ஊழியர் நிர்வாகத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 10,407 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 10,894 ஆக காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 2017 யூலை 20 தொடக்கம் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது. இப்பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமை அதிகாரசபையின் பதவியணியினர் முகாமைத்துவம் தொடர்பில் தொடர்ச்சியாக தாக்கமளித்திருந்த போதிலும் அது தொடர்பான துரித நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்தினதும் அமைச்சினதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந்தெருக்கள் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நேரடியாக தொடர்புபட்ட 304 நிரந்தர பராமரிப்புத் தொழிலாளர்களிற்கான வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டன.

(இ) தற்காலிக பராமரிப்புத் தொழிலாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படாத போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான 1,158 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஈ) அதிகாரசபையால் துணைச் சேவை தரத்திற்குரிய உதவியாளர் சேவைக்காக 2,550 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சேவை தரத்திற்காக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 2,540 பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 10 ஊழியர்களிற்கு வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் 94 ஊழியர்கள் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(உ) நிறுவனத்தின் செயலாற்றலிற்கு காரணங்களான தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவையில் 163 உத்தியோகத்தர்களிற்கு வெற்றிடங்கள் காணப்பட்ட போது 250 உத்தியோகத்தர்கள் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அதில் 211 உத்தியோகத்தர்கள் பொறியியலாளர் பதவியணியினரிற்கு உரிய உத்தியோகத்தர்களாவர்.

(ஊ) 2018 யூன் 28 ஆந் திகதிய 2018/சீஎஸ்/35 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசித்திபெற்ற சேவை நிலையமொன்றில் 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக சேவையாற்றிருத்தல் மற்றும் இதற்கு முன்னர் பிரசித்தியடையாத சேவை நிலையமொன்றில் 3 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக சேவையாற்றாதவர்கள் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்காத போதும் கடமை தேவைப்பாட்டின் பிரகாரம் வருடாந்த இடமாற்றத்தின் போது பின்பற்ற கொள்கையொன்றாக கருதி இடமாற்றம் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேல் மாகாணம் மற்றும் சபரகமுவ மாகாண பணிப்பாளர் அலுவலகங்களில் மாத்திரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று வருடாந்த இடமாற்றம் பெறாமல் அச்சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக 37 உத்தியோகத்தர்கள் சேவை புரிந்து வந்தனர்.

(எ) மேல் மற்றும் சபரகமுவ மாகாண பணிப்பாளர் அலுவலகங்களில் பதவியணியின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 81 ஆக காணப்பட்ட போதிலும், கடமைப் பட்டியல்கள் 38 ஊழியர்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

**4.9 வாகனப் பயன்பாடு**

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் பராமரிக்கப்படும் சொத்துக்கள் பதிவேட்டின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கு உள்ளடக்கப்பட்ட ரூபா 271 மில்லியன் கிரயமான 19 வாகனங்கள் தொடர்பான அவ்வாகனங்களின் பதிவு இலக்கம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, யாரிடமிருந்து கிடைத்தது என்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வினால் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிடும்போது 06 வாகன வகைகள் மற்றும் மாதிரி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் ஒன்றுக்கொண்டு இணங்கவில்லை. மேலும், இவ்வாகனங்கள் மீது அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபைக்குரிய வாகனங்களாக குறிப்பிடப்பட்டு கணக்கு பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தகவல்களுடன் ஒப்பிடும் போது 170 வாகனங்கள் ஏனைய நபர்களின் பெயரில் அல்லது தனியார் நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 35 வாகனங்கள் அதிகாரசபையின் சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் காணப்படுகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியது என்பது தொடர்பாக அறிந்திருந்தது.

(அ) மேற்குறித்த பிரகாரம் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பான அறிந்திருத்தல் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தமது விடயப்பரப்பின் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்களாக அனைவருக்கும் முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார செழிப்பு, முழுமையாக ஆக்கபூர்வமான சிறந்த தொழில் மேம்படுத்தல்கள், பூகோள சுற்றாடல் முறைமைகளின் நிலைபேறான பயன்பாடு, நிலைபேறான வனாந்தர முகாமைத்துவம், பாலைவனமாவதற்கு எதிராக செயற்படுதல், பாதுகாப்பான மேம்படுத்தல், மண்ணரிப்பினை தடுத்தல், மற்றும் புனைரமைப்பு மற்றும் உயிர் பல்வகைப்படுத்தல், காணி அழிவடைதலை நிறுத்துதல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டுவருதல் போன்ற முறை பயன்படுத்தல், நிலைபேறான அபிவிருத்திக்காக உலகலாவிய ஒத்துழைப்பை கட்டியெழுப்புதல் போன்ற நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடுளுக்காக ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டிய தரப்பினருக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, நகர அபிவிருத்தி அதிகாரசபை நிலைபேறான அபிவிருத்தி வனசீவராசிகள் அமைச்சு மற்றும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு போன்ற தரப்பினருடன் ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏதேனும் செயற்பாடொன்று சரியான செயலாற்றலை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படுதல் அத்தியவசியமாக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படுதல் அத்தியவசியமாக இருந்த போதிலும் அதிகாரசபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்று உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தன.

(ஈ) நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அதிகார சபையினால் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயார்படுத்தலின் போது ஏனைய நிறுவனத்துடன் உரிய கூட்டிணைப்பொன்று இல்லாமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கும் போதும் முன் தயார்ப்படுத்தல் செயற்பாடு மிகவும் மந்தமான மற்றும் பலவீனமான நிலைமையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடைவ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக போதியளவு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2017 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுகளின் கீழ் மாகாண பணிப்பாளர் அலுவலகங்கள், பிரதம பொறியியலாளர்கள் அலுவலகங்கள் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களில் கணக்காய்வினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. மேலும், பிரதம பொறியியலாளர்கள் அலுவலகங்கள் அமைந்துள்ள மாவட்ட எஸ்பொலட் வேலைத்தளங்கள், கல் உடைக்கும் இயந்திரகூடம் அமைந்துள்ள வேலைத்தளங்கள், உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட வீதி செயற்திட்டங்கள் வெளிக்கள கணக்காய்வின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காணி கொள்வனவு, முறைமை கணக்காய்வுகள் மற்றும் அதிகாரசபை உரிமையைக் கொண்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மகநெகும கம்பனிகளின் கணக்காய்வு, வ/ப அதிவேக போக்குவரத்து (தனியார்) கம்பனி மற்றும் நிர்மாணச் செயற்திட்ட நிர்மாணங்களின் தொழில்நுட்ப கணக்காய்வுகள் போன்ற அதிகமான இடரினையுடைய பரப்புக்கள் உள்ளகக் கணக்காய்வினால் மேவுகைசெய்யப்பட்டிருக்கவில்லை. ஆத்துடன் உரிய துறைகளில் கணக்காய்வு ஆபத்தின் அளவின் பிரகாரம் நிறையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கும் போது அது தொடர்பாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டில் மற்றும் சுற்றறிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 6.2.1 சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினுள் பெறுகை பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 47 பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. அப் பெறுகைகளின் பெறுமதி ரூபா 816 மில்லியன் மாத்திரமாக இருந்தது. அதில் ரூபா 487 மில்லியன் அக்ரிகேட் மற்றும் முன்கலவை கொள்வனவு செய்தல் சொத்துக்கள் கொள்வனவு செய்யும் பெறுகை ரூபா 33.72 மில்லியனாக இருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் நிதியங்களிலிருந்து விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த சொந்துக்களின் கிரயம் ரூபா 87.66 மில்லியனாக இருந்தமையால் மொத்த சொத்துக்களில் பெறுகை பிரிவின் பங்களிப்பு 38.46 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2.2 கோவைகளை பெற்றுக் கொள்ளல் சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதலும் மற்றும் குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்குரிய பெறுகை செயற்பாடு

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஊழியர் போக்குவரத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை ஊடாக செத்திரிபாய முதல் காலி மற்றும் மாத்தறை வரை ஈடுபடுத்தியிருந்த பேருந்துகளை தெரிவு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் இடம் பெற்றிருந்தது.

(i) அதிகார சபையினால் போட்டி கூறு விலை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இப் பெறுகையின் போது மேம்படுத்தலுக்குரிய விதந்துரைகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்படாதிருந்ததுடன் இயந்திர பொறியியாலர் ஒருவரினால் பேருந்துகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.3.11 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி பாதுகாப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூறுவிலை சமமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களால் அவ்வாறான கேள்விப் பாதுகாப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) போக்குவரத்து சேவை பெற்றுக் கொள்வதற்குரிய வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சேவை வழங்குனர் நிறுவனங்களுக்குகிடையே சேவை உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் வெள்ளவாய (A02) வீதியின் மாத்தறை நிறைவேற்று பொறியியளார் அலுவலகத்திற்குரிய வெலிகம கொவியாபான பிரதேசத்தின் அதிகாரசபைக்குரிய 01 ரூட் 38.4 பேர்ச் அளவிலான காணி பகுதியை குத்தகைக்கு வழங்கும் போது போட்டி கேள்வி கோரல் தொழில்நுட்ப மதிப்பீடு பெறுகை குழுவொன்று ஊடாக பெறுகை மேற்கொள்ளாமை போன்ற குறித்த பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் 2007 மார்ச் 15 ஆந் திகதி முதல் கொத்தொடுவ புதிய நகரத்தில் குடியிருக்கும் நபரொருவருடன் வாடகை ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மேல்மாகாண பணிப்பாளர், அலுவலகம் 2017 நவம்பர் 07 முதல் இலக்கம் 32/2 பாடசாலை மாவத்தை, நாவல, இராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டிடமொன்றுக்கு கொண்டு செல்வதற்குரிய பெறுகை தீர்மானம் 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி ஒரு வருடத்திற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 22 மாதங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்குரிய விதந்துரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2.3 ஒப்பந்த நிருவாகத்திற்கான குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 55.5 மில்லியனான நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ஒப்பந்தக்காரர்களுக்கு மிகை செலுத்த வேண்டுமென உறுதிப்படுத்திக்கையில் அப் பெறுமதியை வருமானத்திற்கு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மேலும் செலுத்த வேண்டிய நிறுத்தி

வைக்கப்பட்ட தொகையாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 55 மில்லியன் இடை நடுவில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட தொகையாக இருந்தது.

(ஆ) சில ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 6.07 மில்லியனால் நிறுத்தி வைகப்பட்ட தொகைக்குரிய குறைபாடுகள் சரிப்படுத்தப்படாமையால் நிறுத்தி வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குறித்த குறைபாடுகளை சரி செய்யாமல் தொடர்ந்தும் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக்காரரால் கோரப்படாமையால் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 683.01 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புகளுக்குரிய ஒப்பந்தம் முடிவடைந்திருந்தது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் அத் தொகையை ஒப்பந்தக்காரர் கோரவில்லையென மாத்திரம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 640.92 மில்லியனனை நிறுத்தி வைத்தல் தொகை ஒப்பந்தக்காரரால் கோரப்பட்டு நடப்பாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவு மற்றும் 04 மாகாண அலுவலகங்களுக்கு உரிய 03 ஆண்டுகள் முதல் 04 வரை, 04 ஆண்டுகள் முதல் 05 வரையிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முறையே ரூபா 50.4 மில்லியன், ரூபா 28.5 மிலலியன் மற்றும் ரூபா 6.15 மில்லியனான மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்களாக காணப்பட்டதுடன் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அல்லது காலம் கடந்ததன் பின்னர் மீளச்செலுத்தாமல் அதிகாரசபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் உரிய பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் கண்காணிக்கப்படாமல் அவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

### 6.2.4 வீதி விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தலுக்குரிய செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,332.88 மில்லியனாக இருந்த 181 ஒப்பந்தங்களின் வேலைகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 110 ஆக இருந்ததுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,053.33 மில்லியனாக இருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 178 ஆக இருந்ததுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 8,807.95 மில்லியனாக இருந்தது. இந்த ஒப்பந்தங்களுக்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்ட செலவினத்தில் கூட்டுத்தொகை ரூபா 1,224.6 மில்லியனாக இருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 27 செயற்திட்டங்கள் அவ்வாண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மொத்த ஒப்பந்த எண்ணிக்கையில் 3.1 சதவீதமாக இருந்தது. அந்த 27 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,468 மில்லியனாக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த ஒப்பந்தங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 962.35 மில்லியனாக இருந்தது.

### 6.2.5 உள்நாட்டு வங்கிகளால் நிதியளிக்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டங்கள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2018 யூலை 30 இல் உள்ளவாறு உள்நாட்டு வங்கிகள் மூலம் பெற்றுக்கொண்டு தீர்வு செய்யப்படாத திரட்டிய கடன் மீதி ரூபா 214,262 மில்லியானக இருந்தது. இக்கடன் மானியம் 07 பிரதான உள்நாட்டு வர்த்தக வங்கிகளிடமிருந்தும் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்தும் பெருந்தெருக்களை மேம்படுத்தல், விரிவாக்குதல், அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல் மற்றும் காணி கையேற்பின் போது இழப்பீடு செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

நாடு பூராகவும் உள்ள 1433.85 கிலோமீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்காக உள்நாட்டு வங்கிகளிலிருந்து ரூபா 152 மில்லியனான கடன் தொகையை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அந்த 64 வீதிகளை புனரமைப்பதற்காக ரூபா 152 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்கள் அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இச்செயற்திட்டத்திற்குரிய 64 வீதிகளில் 28 வீதிகளை நிர்மாணிப்பதற்காக தேசிய சேமிப்பு வங்கியுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 55,392 மில்லியனாக இருந்தது. அத்தொகையில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் வரையில் ரூபா 28,000 மில்லியன் கடன் உடன்படிக்கைக்கு முரணாக வேறு செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கடன் உடன்படிக்கைக்கு முரணாக பெற்றுக்கொண்ட ரூபா 28,000 மில்லியன் பணம் அதிகாரசபையில் அப்போது காணப்பட்ட துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, ஏனைய வெளிநாட்டு நிதியுதவிகள் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் வீதி நிர்மாண நடவடிக்கைகள், நிர்வாகச் செலவினம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பெறுபேறாக இவ்வீதிகளில் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும், 06 செயற்திட்டங்களின் வேலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 28,000 மில்லியனாக மேலதிக செலவினத்தை மேவுகை செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 5,400 மில்லியன் தொகையும் 2016 ஆம் ஆண்டில் 6,250 மில்லியனும் 2017 ஆம் ஆண்டில் 3,300 மில்லியனுமாக ரூபா 14,950 மில்லியன் கூட்டுத்தொகை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணத்திற்குரிய உத்தேச வீதி நிர்மாண வேலைகள், வீதிகளின் நீளம், அகலம், கொங்கிரீட் காண் முறைமை, மதகுகள், ஓரச்சுவர் மற்றும் வீதிகளின் சுற்றுப்புற மேற்பரப்பின் நிர்மாணம் போன்ற இவ்வேலை உருப்படிகளில் விடயப்பரப்பு முதலில் திட்டமிடப்பட்டிருந்த வகையை விட குறைவான நிறைவேற்றப்பட்டிருந்தன.

### 6.3 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மட்டக்களப்பு – திருக்கொண்டை ஆறு - திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்திற்கு அப்பாலுள்ள அம்பேபுஸ்ஸ – குருநாகல் - திருகோணமலை (ஏ-6) என்பவற்றை இணைக்கின்ற திருகோணமலையிலுள்ள வெளிச்சுற்று வட்ட வீதிகளுக்காக ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495 மில்லியன் தொகை செலவழித்து 08 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பாலங்களை இணைக்கின்ற வீதிகளின் நிர்மாணம் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நிதிகளின் பற்றாக்குறை காரணமாக இப்பாலங்கள் இணைப்புசெய்யும் வீதி நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் மூலம் ஹல்துமுல்ல – அம்பிலிப்பிட்டி – நோனாகம வீதி புனரமைப்பிற்காக தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து ரூபா 2,172 மில்லியன் கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வீதி புனரமைப்பின் போது ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த 01 விலகல் கட்டளைகளின் பிரகாரம் ரூபா 18 மில்லியன் அம்பிலிபிட்யவில் உள்ள சனாபதி மாளிகைக்குரிய நிர்மாணக் கிரயமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கலிகமுவ ருவன்வெல்ல கரவனல்ல வீதியில் காணப்படும் ஒடுங்கிய மற்றும் சிதைவடைந்த 07 பாலங்கள் தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை 31 ஆந் திகதி வரை அப்பாலங்களில் 06 பாலங்கள் 2018 ஒக்தோபர் மாத இறுதி புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 பொது முயற்சிகள் குழு மற்றும் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களினை அமுல்படுத்தாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 14 இல் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பங்குகளின் பெரும்பான்மையினை பொதுத் திறைசேரி கொண்டிருக்கும் அதேவேளை மிகுதியினை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொண்டிருக்ககூடியதாக மூன்று மகநெகும கம்பனிகளின் அமைப்பு அகவிதியினை திருத்தியமைப்பதற்கு வழிகாட்டப்பட்டது. எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த தீர்மானத்திற்கு மேலதிகமாக, அந்தக் கம்பனிகள் தொடர்பில் 2017 ஆகஸ்ட் 10 இல் பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பின்வரும் வழிகாட்டல்கள் கூட 2017 நவம்பர் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரசபை மீது மகநெகும வீதி நிர்மாண உபகரண கம்பனி மற்றும் எமியுல்சன் உற்பத்தி கம்பனியின் உரிமைத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

(ii) மகநெகும எமியுல்சன் உற்பத்தி கம்பனியில் 2004 யூன் 05 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,000,000 உரிமை முதலீட்டிற்காக வைப்புக்களுக்கு பங்கு சான்றிதழ்கள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விநியோகித்தல்

(iii) ஒப்பந்த செயற்பாடுகளினை வழங்குவதற்கு அதிகாரசபை உரிமையைக் கொண்டுள்ள சொத்துக்களினை பயன்படுத்த கம்பனிகளினை அனுமதிக்கும் அதேவேளை அதிகாரசபைக்கு 28 சதவீத நட்டத்தினை கம்பனிகளுக்கு ஏற்படுத்துவதற்கு ஒப்பந்தங்களினை அளிப்பது தொடர்பில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் தீர்மானமொன்றை எடுத்தல்.

(இ) 2017 செப்தம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை 03 மாதங்களுக்குள் தயாரிப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை திகதி வரை அக்கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | மாதிரிப் பட்டியல் வழங்கல் | பட்டியலிடல் செயற்பாடு முறையாகவும் காலரீதியாகவும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | காணி, கட்டிடங்கள் வாகனங்கள் உட்பட சொத்துக்கள் தொடர்பான அறிக்கையிடல், பயன்பாடு, மற்றும் நிர்வாக சட்ட விதி பிரமாணங்களுக்கு இணங்கவும் முறையான கட்டுப்பாடின்றி மேற்கொள்ளல் |
| (இ) | கொடுப்பனவு பிரிவின் நடவடிக்கைகள் | கொடுப்பனவு செயற்பாட்டை முறைப்படுத்துதுல் மற்றும் கொடுப்பனவின் போது அக்கொடுப்பனவின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய ஆரம்ப ஆவணங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல். |
| (ஈ) | முற்பணத் தீர்ப்பனவு | முறையாக உரிய காலத்திலும் மேற்கொள்ளாமை |
| (உ) | குணக்கீடு | சேலவின மூலம் மற்றும் தொடர்புடைய தனித்தனி கணக்குகள் பேணாமை, பொருத்தமான கணக்குக் கொள்கைகள் அறிமுகப்படுத்தாமை, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை, கணக்கீட்டு குறைபாடு தொடர்பில் கூடிய கவனம் |
| (ஊ) | பதவியணியினர் முகாமைத்துவம் | பிரத்தியேக கோவை, அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புதல், இடமாற்றம் செயற்பாடு செயற்படுத்தப்படாமை. |
| (எ) | கொள்வனவு | கொள்வனவின் நன்மை யை அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், செயன்முன்ஆேனற்ற மீளாய்வு மற்றும் இயலுமானவரை மத்தியமயப்படுத்தப்பட்ட பெறுகையுடன் தொடர்புபடல் |